| O.S.No. 156/2021 | DW2: திரு. N. கஜேந்திரன்<br>த/பெ. திரு. நரசிம்ம நாயுடு | 01-04-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் இருமந்தாங்கல் கிராமத்தில் வசிக்கின்றேன். எனக்கு நிலம் வாங்கி கொடுப்பது தொழில் என்றால் இல்லை, விவசாய தொழில். வாதிகள், பிரதிவாதிகளை தெரியும். பிரதிவாதிகள் பல்லி கிராம பள்ளக்காலனியை சேர்ந்தவர்கள். எந்த சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விஷயம் எனக்கு தெரியும். தாவா சொத்தின் விஸ்தீரனம் தெரியும், சர்வே எண் தெரியாது. அதன் விஸ்தீரனம் 2 ஏக்கர் 23 சென்ட் ஆகும். வழக்கு சொத்து முதலில் குப்பனுக்கும், சித்திரை மகன் கன்னியப்பனுக்கும் உரிமையானதாகும். குப்பனுக்கும், சித்திரை மகன் கன்னியப்பனுக்கும் சொத்து எவ்வகையில் வந்தது என்று எனக்கு தெரியாது. முருகன், சித்திரை ஆகியோர் அண்ணன் தம்பிகள் என்றால் மற்றவர் சொல்லிதான் எனக்கு தெரியும். முருகனின் மகன் குப்பன் என்றால் சரிதான். குப்பனின் மனைவிதான் 1–ம் வாதி சந்திரா. குப்பனின் மனைவி சந்திராவிற்கு புன்னை புதுப்பாளையம் சொந்த ஊர் ஆகும்.

2. குப்பன் இறந்து சுமார் 25 வருடம் இருக்கும் என்றால் சரிதான். குப்பன் உயிருடன் இருக்கும்போது அவரது மனைவி சந்திராவிற்கு ஒரு கால், ஒரு கை செயலிழந்துவிட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. குப்பன் இறந்தபிறகு அவரது மனைவி சந்திராவும், குழந்தைகளும் புதுப்பாளையம் கிராமத்திற்கு குடியேறிவிட்டனர் என்றால் இல்லை, அவர்கள் ஊரிலேயேதான் இருந்தார்கள். மேற்படி அனைவரும் புதுப்பாளையம் கிராமத்திற்கு குடியேறிவிட்டார்கள் என்றாலும், வழக்கு சொத்தினை சித்திரையின் மகன் கன்னியப்பன்தான் நிர்வகித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

3. குப்பனுடைய சிறிய தகப்பனார் மகன்தான் 3–ம் பிரதிவாதி கன்னியப்பன் ஆவார். சந்திரா அம்மாள், கவிதா, மாரி அனைவரும் சேர்ந்து சாந்தா என்பவருக்கு 2004–ம் ஆண்டு கிரையம் கொடுத்த கிரைய பத்திரத்தில்

நான் சாட்சி கையெழுத்து செய்தேன், தேதி மாதம் தெரியாது. அந்த கிரைய பத்திரத்தில் சந்திரா கைநாட்டு வைத்தார், சந்திரா கையெழுத்து போடுவாரா போடமாட்டாரா என்று எனக்கு தெரியாது. கன்னியப்பன் சொத்தினை கிரையம் கொடுத்தார் என்றாலும், அந்த சமயம் சந்திரா அம்மாள் ஒரு கை, கால் வராமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்றாலும் சரியல்ல.

4. இந்த வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் 1-ம் வாதி சந்திரா உடல்நலம் சரியில்லாமல் இருந்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1-ம் வாதி சந்திரா உடல்நலம் சரியில்லாமல் இருப்பதை பயன்படுத்திக்கொண்டு கன்னியப்பன் மோசடியான ஒரு கிரைய பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் வாதிகள் யாரும் அவர்களது பாக சொத்தினை கிரையம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, அனைவரும் வந்து கிரையம் செய்து கொடுத்தார்கள். 2-ம் பிரதிவாதி சாந்தா எனக்கு உறவினர் இல்லை. சாந்தாவிற்கு கிரையம் கொடுத்த பத்திரத்தில் மட்டுமே சாட்சி கையெழுத்து போட்டேன், வேறு பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடவில்லை.

5. பி.சா.ஆ.12 பத்திரத்தினை எனக்கு படித்து காண்பித்தார்கள். பி.சா.ஆ.12 பத்திரத்தில் உள்ள வாசகங்கள் எனக்கு தெரியும். பி.சா.ஆ.12 பத்திரத்தின்படி கன்னியப்பன், சந்திரா, கவிதா, மாரி ஆகியோர் சேர்ந்து 2-ம் பிரதிவாதி சாந்தாவிற்கு கிரையம் கொடுத்தார்போல் அதில் வாசகம் கண்டு எழுதப்பட்டது. பத்திரத்தினை படித்து காண்பித்தவரும் மேற்படிதான் சொன்னார். கிரையம் கொடுத்தவர்கள் என்ற அடிப்படையில் மாரி, கவிதா ஆகியோர் கையெழுத்து போட்டார்கள். குப்பனுக்கு சொந்தமான சொத்தினை அவரது வாரிசுகள் அனைவரும் சேர்ந்து விற்க வேண்டும் என்றால் சரிதான். குப்பனுக்கு வாதிகள், மாரி ஆகியோர் வாரிசுகள் ஆகும்.

6. கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்கும்போது குப்பனுக்கு அம்மாயி, அபிராமி ஆகியோர் வாரிசுகள் என்ற விஷயம் தெரியுமா என்றால் தெரியும், அந்த

சமயம் அவர்கள் மைனர்களாக இருந்தார்கள். மைனருக்கு அவர்களது தாய் தந்தையர் கார்டியனாக இருந்து பத்திரம் எழுதுவார்கள் என்றால் சரிதான். மைனர்களுக்கு கார்டினயன் என்று குறிப்பிட்டு பி.சா.ஆ.12 கிரைய பத்திரம் எழுதப்பட்டதா என்றால் அவ்வாறு இல்லை. 3, 4 வாதிகள் கிரைய பத்திரத்தில் கையெழுத்து போடவில்லை. எனக்கு பணம் வாங்கிக்கொண்டு மோசடியாக தயார் செய்யும் பத்திரங்களில் சாட்சி கையெழுத்து போடுவது வழக்கம் என்றாலும், அதன் அடிப்படையில்தான் நான் பி.சா.ஆ.12 கிரைய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.12 கிரைய பத்திரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

ஒம்/- N. கஜேந்திரன்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.01 11:36:43 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**